කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව
முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்
DEPARTMENT OF MANAGEMENT AUDIT

මුදල්, ආර්ථික සහ ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශය මහලේකම් කාර්යාලය, කොළඹ 01

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு செயலகம், கொழும்பு 01

Ministry of Finance, Economy and Policy Development
The Secretariat, Colombo 01

මගේ අංකය / எனது இல / My No: DMA/Sys.Aud/check list/01

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2020.02. .

பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள்
உள்ளக கணக்காய்வாளர்கள் யாவருக்கும்.

அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண 'பி' கணக்குகளை கணக்காய்வு செய்தல்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகள் ஆகியவற்றில் உள்ள, அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண 'பி' கணக்குகள் சம்பந்தமான பல பிரச்சினைகள் காணப்படுவதாக கணக்காய்வாளர் அதிபதியின் விசாரணைகள், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் அரச கணக்குகள் செயற்குழுவுக்கு அனுப்பப்படுகின்ற கணக்காய்வுப் பந்திகளின் மூலம் அவதானிக்கப்படுகின்றது. இவ்வாறான காரணங்களினால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், அதேபோன்று கடனுக்காக பிணை நிற்கின்ற பிணையாளர்கள் ஆகியோரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றபடியினால் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்/ உள்ளகக் கணக்காய்வாளர் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண 'பி' கணக்குகள் சம்பந்தமான கணக்காய்வு நடவடிக்கைகளின் பொருட்டு முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

02. உள்ள கட்டுப்பாட்டு முறைகளை மதித்து மேற்குறிப்பிட்ட கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு இணைப்பு இலக்கம் 1 மற்றும் 2 சரிபார்ப்பு பட்டியல் இந்த திணைக்களத்தினால் வெளிப்படுகின்ற அதேவேளையில், அதன் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளை செயற்படுத்தி அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண 'பி' கணக்குகளை தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

03. உத்தியோகத்தர்களின் முற்பண 'பி' கணக்குகளின் நிலுவைகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நட்டத்தை குறைத்துக் கொள்வதற்கும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு மற்றும் பிணையாளர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமத்தை குறைத்துக்கொள்ளவும் நீங்கள் வழங்குகின்ற ஒத்துழைப்பை பெரிதும் மதிக்கிறேன்.

04. தங்களால் கணக்காய்வு செய்து கொண்டிருகின்ற அதேவேளையில் இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய விடயங்கள் அடையாளம் காணப்பட்டால் அவற்றையும் பரிசீலனை செய்யவேண்டிய அதேவேளையில், அந்த விடயங்களையும் இந்த திணைக்களத்திற்கு அறிவித்து இந்த மாதிரியை இற்றைப்படுத்திக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எஸ்.ஏ. சந்திரா குலதிலக

பணிப்பாளர் நாயகம்

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484816, 2484500, 2484600, 2484700
අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General: (9411) 2484543
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 2449496
වෙබ් අඩවිය / வெப் சைட் / website: www.treasury.gov.lk

அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் "பி" கணக்கு சம்பந்தமான கணக்காய்வை சரிபார்த்தல் பட்டியல்

நிறுவனத்தின் பெயர்: கணக்காய்வு வருடம்:

பரிசீலனை செய்த திகதி:

கணக்காய்வாளரின் பெயர்:

| தொடர் இல. | விபரம் | ✓/x | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|
| 1. | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் "பி" கணக்கின் ஆரம்ப மீதி திறைசேரி புத்தகங்களுடன் இணங்குகின்றதா? | | |
| 2. | முற்பணங்கள் "பி" கணக்கின் 506 ஆம் அறிக்கையில் காட்டப்படுகின்ற நிலுவை பேரக் கணக்கு நிலுவை பட்டியலின் மொத்தத்துடன் இணங்குகின்றதா? | | |
| 3. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்களை வழங்குதல் மற்றும் அறவிடுதல் ஆகியவற்றின் போது உள்ளக கட்டப்பாட்டு செயல்முறையை பரிசீலனை செய்க. | | |
| 3.1 | ஒவ்வொரு கடன் பெறுநருக்கும் வெவ்வேறான கடன் கடிதக் கோப்பு வீதம் பராமரிக்கப்பட்டு வருகின்றதா? | | |
| 3.2 | கடன் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் போது அவை கடனை வழங்குவதற்கான சாதாரண நிபந்தனைகளுக்கு அமைவாக பரிசீலனை செய்து பெற்றுக் கொள்ளப்படுகின்றதா? பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் முன்னுரிமைப் படுத்தப்படுகின்றதா? | | |
| 3.3 | நிருவாகப் பிரிவின் சகல தகவல்களையும் பூர்த்தி செய்ததன் பின்னர் கொடுப்பனவை அனுமதித்து கடன் கோப்பு கணக்கு பிரிவுக்கு அனுப்பப்படுகின்றதா? | | |
| 3.4 | கடனுக்கான காசோலை கோப்புடன் கணக்கு பிரிவிலிருந்து திரும்ப கிடைத்ததன் பின்னர் தாபன விதிக் கோவையின் XXIV இன் பிரகாரம் எழுத்து மூலம் காசோலை ஒப்படைக்கப்படுகிறதா? | | |
| 3.5 | தாபன விதிக் கோவையின் XXIII ஆம பின்னிணைப்புக்கு அமைவாக ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னர் கடன் தொகை செலுத்தி முடிக்கப்படுகிறது என்பது தொடர்பான மாதிரி படிவத்தில் வாக்குறுதி ஒப்பம் இடப்பட்டு கோப்பில் சேர்க்கப்படுகின்றதா? | | |
| 3.6 | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.17 மற்றும் அதன் கீழ் உள்ள உப பிரிவுக்கு அமைவாக கடனை பெற்றுக்கொள்வதற்காக தகுதிகளைப் பெற்றிருக்கின்றாரா என்பதை பரிசீலனை செய்க. | | |

| | | | |
|---|---|---|---|
| 3.6.1 | பிணையாளர் பிரதான கடன்காரரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றவரா? இல்லையா? என்பதைப் பற்றி பரிசீலனை செய்க. | | |
| 3.6.2 | பிணையாளரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படுகின்ற தொகையின் எல்லையை பரிசீலனை செய்க. | | |
| 3.6.3 | கடன் தொகையை செலுத்தி முடிக்க முன்னர் பிணையாளர் ஓய்வு பெறுவாராயின் அவருக்கு பதிலாக பிரிதொரு பிணையாளரை முன்னிலைப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா? | | |
| 3.6.4 | பிணையாளரின் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ள போது ஒரு மாதத்திற்குள் பிரிதொரு பிணையாளர் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளாரா? | | |
| 3.6.5 | புதிய பிணையாளர் ஒருவரை முன்னிலைப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில் அந்த நடவடிக்கையை புறக்கணித்திருப்பாராயின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.17.5, 3.17.6 மற்றும் 3.17.7 ஆகியவற்றுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? | | |
| 3.6.6 | புதிய பிணைமுறி ஒன்றை பெற்றுக்கொண்டு பழைய பிணைமுறியை இரத்துச் செய்யும்போது தாபன விதிக்கோவையின் 22 ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவம் பயன்படுத்தப்படுகின்றதா? | | |
| 3.7 | கடன் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாட்டு வேலை தவிர்ந்த வேறு பணிகளுக்காக சம்பளமற்ற லீவினைப்பெற்று வெளிநாட்டுக்கு செல்லும் போது தவணைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று பயன்படுத்தப்பட்டுள்ளதா? | | |
| 3.8 | வெளிநாட்டு வேலைக்காக அல்லது வேறு ஒரு பணிக்காக சம்பளமற்ற லீவினைப் பெற்றுக்கொண்டு வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தரின் கடன் நிலுவைகள் முழுமையாக அறவிடப்பட்டுள்ளதா? | | |
| 3.9 | வெளிநாட்டு தொழிலுக்காக சம்பளமற்ற லீவுகளை பெற்றுக்கொள்கின்ற உத்தியோகத்தர்களின் கடன் தொகையை வெளிநாட்டு லீவுகளை அனுமதிப்பதற்கு முன்னர் அறவிடப்படுகின்றதா? | | |
| 3.10 | சேவையில் நிரந்தரமாக்கப்பட்டில்லாத உத்தியோகத்தர் ஒருவருக்கு கடன் வழங்கும் போது அவரின்/ அவளின் நிரந்தமாக்கப்படுவார் என்பதற்கான சான்றிதழ் ஒன்று இணைக்கப்படுகின்றதா? | | |
| 3.11 | கடன் சம்பந்தமான விசேட நிபந்தனைகள் பின்பற்றப்படுகிறதா என்பதை பரிசீலனை செய்க. | | |
| 3.12 | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சம்பளத்திலிருந்து அறவிட வேண்டிய தொகை அறவிடப்படுகின்றதா? இல்லாவிட்டால் உத்தியோகத்தரின் | | |

| | | | |
|---|---|---|---|
| | விருப்பத்தின்படி குறைந்த எண்ணிக்கையிலான தவணைகளில் அறவிடப்படுகின்றதா? | | |
| 3.13 | யாரேனும் உத்தியோகத்தரின் ஓய்வூதியப் பணிக்கொடை கடனை அறவிட்டுக்கொள்வதற்கு போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் கடன் தொகையை செலுத்தும் வரை மாதாந்த ஓய்வூதியம் சம்பளம் மற்றும் கொடுப்பனவு என்பன முழுமையாக அதற்காக கழிக்கப்படுகிறதா? (தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தில் 4.2.5 ஆம் பிரிவு) | | |
| 3.14 | மரணித்த உத்தியோகத்தரின் நிலுவை கடன் மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்டுள்ளதா? | | |
| 3.15 | மரணப் பணிக்கொடை, கடனை அறவிட்டுக்கொள்வதற்கு போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் கடன் தொகையை பின்னுரிமையாளரிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு சட்டரீதியான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா? | | |
| 3.16 | பிரதான கடன்காரர்களிடமிருந்து கடனை அறவிட்டுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா? | | |
| 3.17 | அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய தொகையை பிரதான கடன்காரர்களிடமிருந்து, பிணையாளர்களிடமிருந்து அல்லது பின்னுரிமையாளரிடமிருந்து அறவிட்டுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளதா? | | |
| 3.18 | யாரேனும் உத்தியோகத்தர் ஒருவரை நிரந்தரமாக அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றுக்கு அல்லது நியதிச் சட்டமுறைச் சபைக்கு விடுவிக்கும் போது, அதற்கு முன்னர் கடன் தொகை அனைத்தும் அறவிடப்படுகின்றதா? | | |
| 4. | முற்பணங்கள் 'பி' கணக்கின் மூலம் கடன் வழங்குதல் மற்றும் தவணை அறவீடு பற்றி மாதாந்த கணக்கு சுருக்கத்தில் காட்டப்படுகின்ற பெறுமதிகள் CC 10 அட்டவணையிலுள்ள மொத்தத்துடன் சீராக்கம் செய்யப்படுகிறதா? (கணக்கு சுருக்கத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கு முன்னர் இதனை மேற்கொள்ளுதல் வேண்டும்.) | | |
| 5. | முற்பணம் 'பி' கணக்கின் நிலுவைகள் திறைசேரி புத்தகங்களுடன் மாதாந்தம் சீராக்கம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா? (நி.ஒ.427(2)) | | |
| 6. | கடன்பெறுநர்/ கடன்கொடுத்தோர் அட்டவணைகளில் கடன்பெறுநர்/ கடன்கொடுத்தோர் நிலுவைகளைத் தீர்க்கும் போது அதற்கான குறிப்புகள் அந்த அட்டவணைகளில் பயன்படுத்தப்படுகின்றதா? | | |
| 7. | ஓய்வூதிய திணைக்களத்தினால் கணக்கு வைக்கப்பட்டுள்ள ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து கடனை அறவிடுவதனை அடையாளம் கண்டு நிறுவனத்தின் புத்தகங்களில் தாமதமின்றி | | |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கம் செய்யப்பட்டுள்ளதா? | | |
| 8. | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகள் கணக்கு சுருக்கத்தின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளதா என்பதை திறைசேரி புத்தகங்களுடன் பரிசீலனை செய்து தொடர்புடைய சீராக்கங்கள் குறிப்புவைக்கப்பட்டுள்ளதா? | | |
| 9. | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகள் உரிய காலத்திற்குள் கணக்கு சுருக்கத்தின் மூலம் தீர்க்கப்பட்டில்லாவிட்டால், அந்த கடன் நிலுவைகளை உரிய தலைப்புகளுக்கு வரவு வைத்து அதுபற்றி தொடர்புடைய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுகின்றதா? | | |
| 10. | இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை துரிதமாக பெற்று கணக்கு சுருக்கத்தின் மூலம் தீர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா? | | |
| 11. | மாகாண சபைகளுக்கு அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை காசோலை மூலம் தீர்ப்பதற்காக தொடர்புடைய நிறுவனத்திற்கு உரிய விதத்தில் அறிவிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா? | | |
| 12. | மாகாண சபையிலிருந்து அல்லது உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளை பெற்று காசோலை மூலம் தீர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா? | | |
| 13. | சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு கடனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? | | |
| 14. | முற்பணங்கள் 'பி' கணக்குகள் தொடர்பான பிழையான வரவு வைத்தல் மற்றும் பற்று வைத்தல் ஆகியவற்றுக்கு உரிய சீராக்கங்களை மேற்கொண்டு தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? | | |
| 15. | I. மாதாந்த கட்டுப்பாடு கணக்குகள்கள் உள்ளடங்கிய பெறுமதிகளை பின்வரும் ஆவணங்களுடன் பரிசீலனை செய்க. | | |
| | II. கடன் வழங்குதல் வவுச்சர்களுடன் | | |
| | III. மாறி வந்துள்ள கடன் நிலுவைகள் மாற்றல் படிவம் ∴ கடன் நிலுவை அறிவித்தல் கடிதம் | | |
| | IV. மாறிச் சென்று உள்ளவை திறைசேரி அச்சு பிரதிகளுடன் | | |
| | V. காசாக தீர்த்தல் - PIV உடன் | | |

| | | | |
|---|---|---|---|
| | VI. ஒய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுதல் - திறைசேரி அச்சு பிரதிகளுடன் | | |
| | கடன்களை பதிவழித்தல் உரிய அனுமதி பெற்றுக்கொண்ட கடிதம் | | |
| 16. | மாதாந்த கட்டுப்பாட்டு கணக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதி மாதாந்த கணக்கு சுருக்கத்துடன் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகின்றதா? | | |
| 17. | கட்டுப்பாட்டு கணக்கில் இறுதி கடன் நிலுவை பேரக் கணக்கு நிலுவை பட்டியல்களின் மொத்தத்திற்கு சமனாக உள்ளதா? | | |

..............................................

கையொப்பம்

.....................................

திகதி